RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1724

# புறநானூற்றில் குடும்பக் கட்டமைப்பு

**இரா. ஜெய்சங்கர் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமுளூர், இலால்குடி-621712, தமிழ்நாடு, இந்தியா

# The Family Structure in Puranaanooru

**R. Jaisankar [a, *]**

[a] Department of Tamil, Government Arts and Science College, Kumulur, Lalgudi-621712, Tamil Nadu, India

* Corresponding Author: bdujaisankar@gmail.com

Received: 30-03-2022
Revised: 30-10-2022
Accepted: 13-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

A closer examination of the ancient Tamil literature reveals that the ancient Tamils lived as an ethnic society and later became small kingdoms and empires and became sovereign societies. In this article, the family in the Sangam literature purananooru and their respective structural structures have been described by the poets Ponmudiyar, Oreruzhavar, Perungundroorkizhar, Pandian Arivudaiyanambi, Pandiya Nedunchezhiyan, Perunchithiranar, Kapilar, Paranar, and Arisilkizhar. Moreover, the above poets have pointed out the sense of duty of the family members in the progress of human life.

**Keywords:** Sangam Literature, Purananuru, Poets, Family Structure, Duties.

## முன்னுரை

நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் என்பது சான்றோர் வாக்கு. இனக்குழுக்களாக வாழ்ந்த நமது முன்னோர்கள் குடும்பத்தைக் கட்டமைப்பதிலும் மனித உறவுகளைப் பேணுவதிலும் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடனும், பொறுப்புடனும் செயல்பட்டுள்ளனர் என்பதைப் பண்டைத் தமிழ்இலக்கியம், ஓவியம், சிற்பம், கல்வெட்டுகள் வழி அறிய முடிகின்றன. அந்த வகையில் சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் குடும்பத்தைக் கட்டமைப்பதில், புலவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டுள்ளதை அவர்கள் பாடல் வழி வெளிக்கொணர்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

அகப்பாடல்களில் உறவுமுறைகள், அவை சார்ந்த குடும்பக்கட்டமைப்பு இடம் பெறுவது இயல்பு. புறநானூற்றுப் பாடல்களில் வீரம், கல்வி, கொடை இவைகள்தானே இடம் பெறும் என்ற கேள்வியுடன் புறநானூற்றுப் பாடல்களை ஒரு பருந்துப் பார்வையாக அணுகியபோது பல பாடல்களில் குடும்பக்கட்டமைப்புத் தொடர்பான சிந்தனைகள் பதிவாகியிருப்பதைக் காணமுடிகிறது. ஆய்வு விரிவு கருதி சில பாடல்கள் மட்டும் நுட்பமான ஆய்வுக்கு உட்டுபடுத்தப்படுகின்றன.

## புறநானூற்றில் குடும்பம்

மனித சமூகத்தில் குடும்பம் என்பது பல உறவு நிலைகளில் பின்னிப் பிணைந்த ஒன்று. புறநானூற்றில் பல பாடல்களில் மனித உறவு முறைகள் பற்றியும் அதனால் உருவாகும் குடும்பக்கட்டமைப்பு பற்றியும் காணமுடிகிறது. மனிதன் இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்வது சிறப்பு.

அவ்வாறு இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்தலில் அவ்இல்லறத்தில் ஏற்படும் இன்ப, துன்ப நிகழ்வுகளிலிருந்து தப்பிக்க முடியாது என்பதை ஓரேருழவர் புலப்படுத்துகிறார்.

"அதள் எறிந்தன்ன நெடுவெண் களரின்

ஒருவன் ஆட்டும் புல்வாய் போல

ஓடி உய்தலும் கூடும்மன்

ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே"

இப்பாடலில், வேடனிடமிருந்து மான் தப்பினாலும் தப்பலாம், இல்லறத்தில் சுற்றத்தோடு வாழும் மனிதர் தங்களது பொறுப்பிலிருந்து தப்பிக்கமுடியாது என்பதை ஓரேருழவர் புலப்படுத்தியிருப்பது இல்லறத்தின் மாண்பைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது (Puliyur kesigan, 2005).

## குடும்பத்தில் குழந்தைச் செல்வம்

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என திருமணத் தம்பதிகளை நம் சமூகத்தில் உள்ள நல்ல உள்ளங்கள் வாழ்த்துவது இயல்பு. பதினாறு செல்வங்களில் குழந்தைச் செல்வம் முக்கியமான ஒன்று. குழந்தைச் செல்வத்தினால் குடும்பம் கலகலப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்பதை பாண்டியன் அறிவுடைநம்பி பாடல் வழி அறியமுடிகிறது.

"படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்

உடைப்பெரும் செல்வர் ஆயினும் இடைப்படக்

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்

பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே"

என்று குடும்பத்தில் வாழ்வோர், பல செல்வ வளங்களைப் பெற்று, கூடி உண்ணக் கோடிச் சுற்றம் இருந்தாலும், தத்தித் தவழ்ந்து விளையாடி, மழலைச் சொல்லால் பெற்றவர்களை அன்பால் மயங்கச் செய்யும் பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு பிறவிப்பயன் இல்லை. மேலும் அவர்கள் வாழும்நாள் வீணான நாளே என பாண்டியன் அறிவுடைநம்பி அறிவுறுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. மேலும் குழந்தைகள் அரசுரிமை உருவாக்கத்தின் அடிப்படையாகயிருப்பதும் பின்பு அவர்கள் வாரிசு உரிமையாக மாற்றம் பெறுவதையும் பாடல்வழி உணரமுடிகிறது (Puliyur kesigan, 2005).

'குழந்தைக் குடும்பம் கூறுபடாது'- என மருதக்கலியில் பதிவாகியிருப்பதைக் காணமுடிகிறது. வள்ளுவர் பெருந்தகை மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் குழந்தைச் செல்வத்தின் சிறப்பினை விவரித்துள்ளார்.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த

மக்கட்பேறு அல்ல பிற" (Parimelalhagar, 2007)

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்

சிறுகை அளாவிய கூழ்"

பாண்டியன் அறிவுடை நம்பியின் சிந்தனை வள்ளுவரின் சிந்தனையோடு ஒப்பு நோக்கத்தக்கவையாக உள்ளது (Parimelalhagar, 2007).

## குடும்பத்தில் இருப்போரின் கடமை உணர்வு

'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'- என்ற பகவத்கீதையின் கூற்றிற்கு இணங்க குடும்பத்தில் இருக்கக் கூடிய ஒவ்வொரு நபருக்கும் கடமை உணர்வு இருக்க வேண்டும் அவ்வாறு இருக்கும் நிலையில் அவர்கள் வாழும் சமூகம் சிறப்பான முன்னேற்றத்தை எட்டும்.

புறம்.312-ஆம் பாடலில் பொன்முடியார் குடும்பத்தில் வாழ்வோரின் கடமையுணர்வினை பின்வருமாறு கட்டமைத்துள்ளார். குழந்தையைப் பெற்று நோய் நோடியில்லாமல் அக்குழந்தையை ஆளாக்குவது தாயின் கடமை. அக்குழந்தையைக் கல்வி பயிலச் செய்து சிறந்த அறிஞராகத் திகழச்செய்வது தந்தையின் கடமை. அவ்வறிஞர்களை நற்செயல்களில் ஈடபடச் செய்து, நாட்டை பல வகையில் முன்னேறச் செய்வது ஆளும் ஆட்சியாளரின் கடமை. நாட்டின் முன்னேற்றத்திற்கும், பாதுகாப்பிற்கும் எந்தவொரு தியாகத்தையும் செய்து சிறந்த வீரனாகத்திகழ்வது காளைகளின் (இளைஞர்களின்) கடமையாக இருக்க வேண்டுமென, கடமையுணர்வோடு குடும்பத்தைத் கட்டமைத்திருப்பதைப் பொன்முடியாரிடம் காணமுடிகிறது.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக்கடனேநன்

நடை நல்கல் வேந்தற்குக் கடனே

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

உரிமையை மட்டும் அதிகம்பேசும் இக்காலகட்டத்தில் மேற்காணும் கடமைகளையும் நாம் ஒவ்வொருவரும் தவறாமல் செய்யும்போது வாழ்வு வளம்பெறும் நாடுநலம்பெறும் (Puliyur kesigan, 2005).

மேலும் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடலில் கல்வியினால் மனிதனுக்கு ஏற்படும் சிறப்பும் அதன் முக்கியத்துவமும் பேசப்பட்டிருப்பதோடு, குடும்பக் கட்டமைப்பும் இலைமறைக்காயாகக் பதிவாகியிருப்பதைக் காணமுடிகிறது. பொதுவாக, ஒரு குடும்பத்தில், நடைபெறும் அனைத்து இன்ப, துன்ப காரியங்களுக்கும் முதன்மையாக நின்று பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியது. மூத்தஆடவனின் கடமையாகும். அக்காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி இவை தமிழ்ச் சமூகத்தின் பொதுவான குடும்பமரபாகும். ஒரு குடும்பத்தில் கல்வியறிவிலும் பிற கடமை உணர்விலும் மூத்தஆடவனைவிட இளையவன் சிறப்பாக அமையும்பட்சத்தில் மூத்த ஆடவனுக்குச் சென்று சேரவேண்டிய மதிப்பும் மரியாதையும் இளையவனுக்குச் சென்று சேரும் என்பதை பாண்டியன் நெடுஞ்செழியன் சுட்டிக் காட்டியிருப்பதைக் காணமுடிகிறது.

"மூத்தோன் வருக என்னாது அவருள்

அறிவுடையோன் ஆறு அரசு செல்லும்"

இப்பாடல்வழி ஒருமனிதன் அறிவோடும் ஆற்றலோடும் திகழும்போது அவனுக்கு மதிப்பும் மரியாதையும் தானே வரும் குடும்ப மரபும் மாற்றத்திற்கு உள்ளாகும் என்பதைச் சுட்டிக்காட்டும்விதமாக அமைகிறது (Puliyur kesigan, 2005).

## குடும்பத்தில் வறுமையிலும் செம்மை

புலவர் கூட்டம், தற்கால நவநாகரீக உலகில் மட்டும் அல்ல, சங்க காலம் ஒரு பொற்காலம் எனக்கருதப்பட்ட காலத்திலும் வறுமையில் உழன்றிருப்பதைக் காணமுடிகிறது. சான்றாக புலவர் பெருஞ்சித்திரனார் குடும்பத்தில் வயதான அம்மா, நினைவு தடுமாறும் அளவுக்கு பசியுடன் பிள்ளைகள். குப்பைமேனிக் கீரையை உப்பு இல்லாமல், கதவடைத்து உண்ணும் அளவுக்கு வறுமை தாண்டவம் ஆடுகிறது.

இக்கொடிய வறுமை புலவர் வீட்டில் இருப்பினும் தன் சுய கௌரவத்தை விட்டுக் கொடுத்தோ! அன்பில்லாதவர் கொடுக்கும் பொருளைப் பெற்றோ! வாழ வேண்டிய அவசியமில்லை என்பதை புறம்.160 ஆம் பாடலில் பெருஞ்சிரத்தினார் பதிவு செய்திருப்பதைக் காணமுடிகிறது.

இப்புலவரின் மற்றொருபாடலில், தான் பெற்று வந்த பரிசுப்பொருளை மனைவியிடம் கொடுத்து உன்னை விரும்புவர்களுக்கும், உன்னால் விரும்பப்படுபவர்களுக்கும், நமக்கு கொடுத்து உதவியவருக்கும், யார், எவர் என்று பார்க்காமல், எதிர்பார்த்துக் கொடுக்காமல், என்னிடம் கூட கேட்காமல் அவைருக்கும் பகிர்ந்து அளிப்பாயாக என தன் மனைவிக்கு அன்புக் கட்டளையிட்டிருப்பதைக் காணமுடிகிறது.

“இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது

வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்

எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே”

மேற்கண்ட பாடல் வழி, குடும்பத்தில் வறுமை நிலவிய போதும் சுயகௌரவத்தை விட்டுக்கொடுக்காமல்வாழ வேண்டும். அந்த வறுமையிலும் தனக்குக் கிடைத்தப் பொருளை அனைவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற புலவரின் உயர்ந்த சிந்தனையையும் விசாலமான பார்வையையும் காணமுடிகிறது (Puliyur kesigan, 2005).

## குடும்பத்தில் மங்கையர்

மங்கையர்களுக்கு தமிழ்ச் சமூகத்தில் மிகுந்த மதிப்பும், மரியாதையும் எப்போதும் உண்டு. ‘மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா’ என்றார் கவிமணி. பல புறநானூற்றுப் பாடல்களில் மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்த சூழலும் அதில் குடும்பத்தைக் கட்டமைப்பதிலும் பேணிக்காப்பதிலும், பெண்களின் பங்கு போற்றுதலுக்குரியவையாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. மேலும் அக்காலத்தில் பெண்களை மரியாதையுடன் நடத்தியசூழல் அவர்களின் சமூகப்பங்களிப்பு ஆகியவை குறித்த செய்திகள் புறநானூற்றில் பதிவாகியிருப்பதைக் காண முடிகிறது.

புறம் 347, 348, 349, 350, 351, 352, 354, 355, 356 ஆகியப் பாடல்கள் வழி குடும்பத்தில் பெண் பிள்ளைகள் இருப்பின் அவர்களை உரிய கட்டுப்பாடுடன் வளர்க்க வேண்டும். அப்பிள்ளைகளுக்கு உரியப் பருவத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும்.

அவ்வாறு அவர்களுடைய தந்தையரும், தமையன்மார்களும் செய்யாமல், தன் வீரத்தையும், பொருளாதார நிலைப்பாட்டையும் பெரிதாக எண்ணி தட்டிக் கழித்தால், பெண் பிள்ளைகளின் இளமைப்பருவம் அழியும். மேலும் அவரைச் சார்ந்த குடும்பத்திற்கும், நாட்டிற்கும் மிகுந்த கேட்டை விளை விக்கும் என்பதைப் புலவர்கள் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் சுட்டிக்காட்டியிருப்பதைக் காணமுடிகிறது.

“மரம்படு சிறுதீப்போல

அணங்கு ஆயினள் தான் பிறந்த ஊர்க்கே” (Puliyur kesigan, 2005)

## குடும்பத்தில் பரத்தையர்

பேகன் கடையெழுவள்ளல்களில் ஒருவன். ஆவியர் குடியில் பிறந்தவன். மயில், குளிரில் நடுங்குவது கண்டு தன் போர்வையை அளித்தவன். இவனது அன்பிற்குரிய மனைவி கண்ணகி. பேகன் சிறந்த வீரனாகவும், புலவர்களைச் சிறப்பாக உபசரிக்கும் பண்பு உடையவனாகவும் திகழ்ந்துள்ளான். இவ்வளவுச் சிறப்புகளையுடையப் பேகன் கண்ணகியை விட்டுப் பிரிந்து நல்லூரில் உள்ள பரத்தையிடம் சென்று சிற்றின்ப வேட்கையில் திளைகின்றான் பேகனின் குடும்பம் சிதறிக்கிடப்பதைக் கண்ட புலவர்

பெருமக்களான கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகியோர் அவனது குடும்பத்தை ஒழுங்குப்படுத்துவதில் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்பட்டிருப்பதை புறம். 143,144,145,146 ஆகிய புறநானூற்றுப் பாடல்கள் வழியாக அறியமுடிகின்றன.

குறிஞ்சித்திணையில் பாடுவதில் வல்லவர் கபிலர். இவர் சங்கப் பாடல்களில் 250-க்கும் மேற்பட்ட பாடலைப் பாடியுள்ளார். பாரியின் உற்ற நண்பர். பேகனின் பரத்தை ஒழுக்கத்தைக் கண்ட கபிலர், அவற்றை நேரடியாகக் கண்டிப்பது நாகரிமல்ல எனக்கருதி பின்வருமாறு ஒழுங்குப்படுத்தியுள்ளார்.

பெய்த மழை போதும் மேகங்களே மேலே செல்லுங்கள் என்று வேண்டி, அதற்காக பலியிட்டுத் தெய்வத்தை வழிபடும் குறவர் மக்கள் வாழும் நாட்டுக்குத் தலைவனே! போரில் வெல்லக் கூடிய சிறந்த ஆற்றலுடைய குதிரைப்படை உடைய பேகனே! உன் நாட்டில் உள்ள ஒரு வீட்டின் முன் ஒரு பெண் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருக்கிறாள். அவளது அழுகுரல் சோகம் நிறைந்ததாக உள்ளது. பசியால் வாடும் எம்பாணர் கூட்டத்தைவிட அவள் மிகவும் இரங்கத்தக்கவள். எனவே அவளுக்கு முதலில் உதவி செய்து அவள் கண்ணீரைத்துடைத்து, கவலையைப் போக்க வேண்டும் என அறிவுறுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

“அருளாயாகல் கொடிதே இருள்வரச்”

அதாவது பாடிப்பரிசில் பெறுவது மட்டும் புலவர்களின் நோக்கமல்ல, நெறிதவறி நடக்கும் மன்னனை நல்வழிப்படுத்தி, மன்னன் குடும்ப வாழ்வில் சிறந்திருக்கச் செய்வதும் தங்களின் கடமை என்பதை பரணர் பாடல்வழி அறியமுடிகிறது (Puliyur kesigan, 2005).

அரிசில்கிழார் என்ற மற்றொரு புலவர், பேகனின் பரத்தை ஒழுக்கத்தைக் கண்டு: கொடைத்தன்மையில் மட்டுமல்ல போராற்றலிலும் சிறந்த விளங்கும் பேகனே! நீ எனக்கு வாரி வழங்கிய பொன்னும் பொருளும், உயர்வான பரிசிலும் உன்னிடமே இருக்கட்டும், இவற்றைத்தேடி நான் வரவில்லை. நீ எனக்கு பரிசு தரவிரும்பினால், தோகை மயில் போன்ற உன் மனைவி உன் பிரிவால் மிகுந்த துயரத்தில் இருக்கின்றாள். அவளின் வருத்தம் தீர நீ உடனே அங்கு செல்ல வேண்டும் அதுவே தாம் விரும்பும் பரிசு என்று கூறுகிறார்.

“பரிசில் நல்குவை ஆயின் குரிசில் நீ

தண் கமழ் கோதை புனைய

வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே”

ஆம் பாடலில், பெருங்குன்றூர்க்கிழார் என்ற மற்றொருப் புலவர், பேகனை நோக்கி, குன்றுகள் சூழ்ந்த அருவிகள் பாயும் மலை நாட்டுத் தலைவனே, உன் மனைவி கண்ணகி, கார்காலத்து வானம் பொழிகின்ற மழைத் துளிகளின் ஓசையைக் காதில் கேட்டபடி, கூந்தலுக்கு நெய் கூட தடவாமல் தனிமையில் தவிக்கின்றாள் (Puliyur kesigan, 2005). உன் மனைவியின் கூந்தலில் புதுமலர் சூடிக் களிக்க, உடனே நீ பரத்தையை விட்டு நீங்கி, உன் மனைவியிடம் செல்ல வேண்டும். அதுவே நீ எங்களுக்கு அளிக்கும் சிறந்த பரிசிலாகும் என நெறிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

“புதுமலர் கஞல இன்று பெயரின்

அது மன்எம் பரிசில் ஆவியர் கோவே”

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையிலிருந்து பேகன் மாறி பரத்தையிடம் சென்றதனால் அவன் குடும்பம் சீர்குலைந்து போகிறது (Puliyur kesigan, 2005). இதனைக் கண்ட கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றுக்கிழார் ஆகிய நான்கு புலவர்களும் பேகனின் செயல் அவனது குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் அவனது அரசாட்சிக்கும் நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்டி அவனை நெறிப்படுத்தி அவனை மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்விக்க வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து உடையவர்களாக இருந்திருப்பதை அவர்கள் பாடல்வழி அறியமுடிகிறது. “ஒழுக்கமே ஒரு குடியரசின்,

ராஜ்யத்தின் அஸ்திவாரமாயிருக்க வேண்டும்" என்ற பேரறிஞர் மாண்டெஸ்கியு கூற்று மேற்கண்ட புலவர்களின் சிந்தனையோடு ஒப்பு நோக்கத்தக்கவையாகும்.

## கைம்மை நோன்பு

புறநானூற்றுப்பாடல்களில், கணவனை இழந்த பெண்களின் நிலைப்பாடு குறித்த செய்தி பதிவாகியிருப்பதைக் காணமுடிகிறது. சான்றாக, பாண்டிய நாட்டு மன்னன்பூதபாண்டியன் இயற்கை எய்தியபோது அவன் மனைவியும் உடன்கட்டை ஏற முயல்கிறாள்.

அமைச்சர் கூட்டம் அதனைத் தடுக்க முயன்றபோது பூதபாண்டியன் மனைவி(புறம்.246) மொட்டை அடித்து வெள்ளையாடை உடுத்தி, நெய் சேர்க்காத உணவு வெள்ளை எள்ளுத்துவையல், புளியிட்டுச் சமைத்த வேளை வெந்தையக் கீரை உணவு, சிறுகற்களே படுக்கை விரிப்பாகக் கொண்டு கைம்மை நோன்பு மேற்கொள்வதைவிட ஈமத் தீயில் கணவனோடு மடிவதே மேல் எனக் கூறுகிறாள்.

இப்பாடலைப் போன்று புறம்.247, 248, 249, 250, 256 ஆகியப்பாடல்கள் வழி கணவனை இழந்த பெண்கள், அக்கால சமூகத்தில் எப்படியெல்லாம் வேதனையுற்றுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

மறக்குடியில் பிறந்தவர்கள், விழுப்புண் அடைந்து இறப்பதே உயர்வாக எண்ணியுள்ளனர். மறக்குடியில் குழந்தை இறந்து பிறந்தாலும், அவற்றை ஒரு முழுமனிதனாகவே கருதி வாளால் வெட்டியப் பின்பு மண்ணில் புதைக்கும் பழக்கத்தை கொண்டுள்ளனர் என்பதை புறம்.74 ஆம் பாடல் வழி அறிய முடிகிறது. இவை போன்ற நிகழ்வுகள் சங்ககால மக்களின் இனக்குழுக்கள் சார்ந்த வாழ்வியல் முறையும் குடும்பத்தைக் கட்டமைக்க கூடிய சூழலும் பின்புலமும் புறநானூற்றுப் பாடல்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

## பெற்ற பிள்ளைகளுடன் போர் வேண்டாம்

"குடும்பம் என்றால் ஆயிரம் இருக்கும், வாசல் தோறும் வேதனை இருக்கும்"- என்ற கண்ணதாசனின் கூற்றுக்கு இணங்க, குடும்பத்தில் ஒற்றுமையுடன் வாழ்வது அல்லது குடும்பத்தில் ஒற்றுமையை நிலவச் செய்வது சவாலான ஒன்றுதான். பெற்ற பிள்ளைகளே கோப்பெருஞ்சோழனுடன் போரிட நிற்கின்றனர் கோப்பெருஞ்சோழனும் போரிடத் தயாராகின்றான்.

அப்போது எயிற்றினார் என்ற புலவர் (புறம்.213) கோப்பெருஞ்சோழனுக்குப் புத்திமதி கூறி அவனுடைய குடும்பத்தில் நடைபெறயிருந்த பெரும் இழப்பையும், சோழவம்சத்தின் சிறப்பையும் காப்பாற்றியிருப்பதைக் காண முடிகிறது.

தன்னல வாழ்வைவிட பொதுநல வாழ்வே சிறந்தது என்பதை கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாடல்வழி அறியமுடிகிறது.

"தமக்கென முயலா நோன்தாள்

புறர்க்கென முயலுநர் உண்மை யானே" (Puliyur kesigan, 2005)

## முடிவுரை

புறநானூற்றுப் பாடல்களில் கல்வி, வீரம், கொடை, நிலையாமை ஆகியவை குறித்தசிந்தனைகள் மட்டும் அல்லாமல் குடும்பம், குடும்பத்தைக்கட்டிக்காக்கும் பாங்கு, குடும்பத்தில் உள்ளோர்களின் கடமைஉணர்வு புலவர்களால் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவை இன்றையகாலகட்டத்திற்கும் தேவையாகஇருப்பதை உணரமுடிகிறது. பாண்டியன் அறிவுடையநம்பி ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகிய மன்னர்களும் குடும்பத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் பாடியிருப்பது சிறப்பாக உள்ளது. இன்றையசூழலில் இம்மன்னர்களின்

சிந்தனைகள் மீட்டுருவாக்கம் தேவையாக உள்ளது. வறுமையிலும் நேர்மையாக வாழ்தல், பரத்தையர் ஒழுக்கத்தைக் கண்டித்தல், கைம்மை நோன்பு, உடன்கட்டைஏறுதல்,தந்தை மகன்பூசல், பெண்பிள்ளைகளை உரியப் பருவத்தில் திருமணம் செய்துவைத்தல் ஆகியப்பண்புகூறுகளைக் கொண்டதாக புறநானூற்றில் குடும்பம் கட்டமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. குடும்பத்தை நெறிப்படுத்துவதில் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகியோர் சிறப்புற்றுக் காணப்படுகிறார்கள். தற்காலத்தில் காணலாகும் குடும்பச்சிதைவுக்கு பல காரணங்கள் இருப்பினும் குடும்பத்தைநெறிப்படுத்துவதில் மேற்கூறிய புலவர்களைப் போன்று சான்றோர்கள் இன்மையும் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. இவ்வாறு, புறநானூற்று கால இனக்குழு மக்களின் குடும்பம், குடும்ப அமைப்புமுறை, சங்ககால புலவர்களால் கட்டமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

## References

Parimelalhagar, (2007) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2005) Purananuru, Pari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License